**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Depositiiton of Witness for | : | PW-1 |
| Name | : | Mr. தினேஷ்குமார் |
| Father Name | : | நடராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.07.2024.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் நல்லூரில் குடியிருந்து பனியன் கம்பெனியில் வேலைசெய்து வருகிறேன். ஆஜார் எதிரியை தெரியும். கடந்த 28.7.2023 - அன்று இரவு 10.15 - 10.40 அளவில் நான் வீட்டில் இருக்கும்போது என் அக்கா கோமதியின் மகள் அனுஷாவிடம் இருந்து எனக்கு போன்கால் வந்தது. தனது தயார் மேட்டுபாளையத்திற்க்கு செல்ல இருப்பதாகவும் அவரை கொண்டுபோய் விடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். நான் இருசக்கர வாகனத்தில் என் அக்கா வீட்டிற்கு சென்று கொண்டிருக்கும்போது என்

அக்கா பாதி வழியில் முத்தனம்பாளையம் பிரிவிற்க்கு வந்து கொண்டிருந்தார். அவரிடம் நான் ஏன் இந்த நேரத்தில் போக வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு இருசக்கர வாகனம் எங்களை கடந்து சென்றாது. நான் திரும்பி பார்த்த சமயம் ஒரு இரும்பு ராடால் எனது வலது புற நெற்றியில் ஆஜார் எதிரி அடித்தார்.

2. அப்போது என் அக்கா எதற்காக அடிக்கிறாய் என்று என்னை பிடிக்க வந்தார். அப்போது எதிரி என்னை மறுபடியும் எதிரி ராடால் இடதுபுற தலையில் அடித்தார். என்ன அக்காவையும் தலையில் அடித்ததால் அவருக்கு இரத்தகாயம் ஏற்பட்டு கீழே விழந்துவிட்டார். எதற்கு அடிக்கிறாய் என்று எதிரியை பிடிக்க சென்ற சமயம் எனத இடது கை முழுங்கையில் அடித்ததால்கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது. அப்போது நடுமண்டையில் மறுபடியும் அடித்தார். நான் போராடி ராடை பிடிங்கி விசினேன். அப்போது ஆஜார் எதிரி என் அக்காவின் கேன்பேக்கை பிடித்து இழுத்து எடுத்துகொண்டு தனது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். நான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து நானும் என் அக்காவும் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். என் அக்காவை கோவை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேனர். நானும் என் அக்காவுடம் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். அங்கு என்னை போலீஸ் வந்து விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தனர்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆகும். பின்னிட்டு வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். மேலும் திருப்பூர் சிறையில் வைத்து எதிரியை அடையாளம் காட்டினேன். தேதி 20 என்று நினைக்கிறேன் சரியாக நினைவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு ராடால் தான் எதிரியை என்னை அடித்தார். மேற்படி இரும்பு ராடு ச.பொ. 1 ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சம்மபவம் நடந்தாக கூறும் பகுதியானது இருட்டான பகுதி என்றால் சரிதான். சம்மபவம் நடந்த இடத்தில் கட்டிடங்கள் வீடுகள் இல்லை என்றால் 30 அடி தூரத்தில் வீடுகள் உள்ளது. சம்மபவம் நடந்த இடத்தில் அருகில் ஆட்கள் வந்தால் யார் என்று தெரியாது என்றால் சரிதான். திருப்பூர் அரசு மருத்துவமைக்கு நான் சிகிச்சைக்கு சென்ற சமயம் என்னிடம் சம்பவம் குறித்து மருத்துவர் விசாரித்தார் என்றால் சரிதான்.

மேற்படி மருத்துவரிடம் அடையாளம் தெரியாது நபர் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் என் அக்காவுடன் கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிக்சைக்கு சென்றேன் என்றால் சரிதான். போலீஸ் விசாரனையில் என்னை அடையாளம் தெரியாத நபர் தாக்கியதாக தான் சொன்னேன் என்றால் சரிதான்.

2. எனது புகாரிலும் போலீஸ் விசாரனையிலும் என்னை தாக்கியதாக கூறும் நபரின் அங்க அடையாளங்கள் நிறம் மற்றும் உயரம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். என்னை தாக்கிய நபர் எந்த வாகனத்தில் வந்தார் வாகனத்தின் பதிவு எண் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி போலீஸ் பிடித்துவிட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். தகவல் கேட்டு நான் காவல்நிலையம் வந்தேன் என்றால் சரிதான். அப்போது எதரியை காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து எதிரியை பார்த்தேன் என்றால் அப்போது பார்க்கவில்லை.

3. காவல் நிலைய லாக்கப்பில் யார் யார் இருக்கிறார்கள் என்ற சொன்னார்கள் ஆமாம் நான் பார்க்கவில்லை. என்னை தாக்கிய நபர் யார் என்று எனக்கு தெரியாது நபர் போலீஸ் லாக்கப்பில் இருந்த எதிரியை இவர் தான் என்று போலீசார் சொல்ல அதன் அடிப்படையில் தான் அவரை பின்னிட்டு நான் அடையளம் காண்பித்தேன் என்றும் தற்போது அதை மறைத்து பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் புகைப்படத்தை போலீசார் வைத்திருந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. லாக்காப் என் மச்சானும் என் அம்மாவும் தான் பார்த்தார்கள். அவர்கள் சொன்னதன் பேரில் நான் எதிரியை பற்றி தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

4. அதன் பின்னிட்டு எத்தனை நாட்கள் கழித்து எதிரியை நீதிபதியிடம் அடையளம் காண்பித்தேன் என்றால் சுமார் 15 நாட்கள் இருக்கும். என் அக்கா எத்தனை நாட்கள் கழித்து சிகிச்சை முடித்து வந்தார் என்றால் 1 வாரம் இருக்கும். அவரும் என் அம்மா மற்றும் மச்சானிடம் எதிரியை பற்றி கேட்டு தெரிந்து கொண்டார் என்றால் இல்லை. நானும் என் அக்காவும் எதிரியை அடையாளம் காட்ட ஒன்றாக தான் ஜெயிலுக்கு சென்றோம். அப்போது அவரை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். போலீசார் எதிரி நேரிலும் புகைப்படம் மூலமாகவும் எங்கள்

இருவருக்கும் தெரிவித்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் தான் அவரை நாங்கள் அடையாள அணிவகுப்பில் அடையளம் காண்பித்தோம் என்றால் சரியல்ல. என்னை தாக்கியதாக கூறும் ராடின் நீளம், தடிமன் குறித்து சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

5. ச.பொ. 1 தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றும் இதற்கு முன்பாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னையும் என் அக்காவையும் யார் தாக்கினார் என்று எங்கள் இருவருக்கும் தெரியாது என்றும் பின்னிட்டு போலீசார் சொல்லிகொடுத்தன் போரில் எதிரியை அடையளம் காண்பித்து தெரிந்து கொண்டு சிறைசாலையில் அவரை அடையளம் காண்பித்து தற்போது அவரை நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை தாக்கிய நபருக்கும் எதிரிக்கும் சம்மந்தம் எதுவும் இல்லை என்றும் எதிரியை சந்தேகத்தின் பேரில் போலீசார் எதிரியை கைது செய்து என்னை அழைத்து அவரை அடையாளம் காண்பிக்க சொல்லிகொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.07.18 17:01:35 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

## DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-2 |
| Name | : | Mrs. கோமதிராணி |
| Husband Name | : | விஜயகுமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.07.2024.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் தாராபுரம் ரோடு செட்டிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பாக முத்தனம்பாளையத்தில் குடியிருந்தேன். அ.சா.1 எனது தம்பி. ஆஜார் எதிரியை பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். 28.11.2023 – அன்று இரவு 1015 மணிக்கு நான் வீட்டில் இருந்து மேட்டுபாளையம் செல்வதற்காக பழைய பஸ் ஸ்டாண்டிற்கு செல்வதற்காக முத்தனம்பாளையம் ரோடில் 10.40 அளவில் வந்துகொண்டிருந்தேன். அ.சா.1 நானும் இருசக்கர வாகத்தில் ஏறும்போது ஆஜார் எதிரி

அந்த வழியாக வந்தவர் தனது வண்டியை திருப்பி செல்லுபோது எனத கேன்பேக்கை கொடு என்று மிரட்டினார் நான் கொடுக்க மறுத்தபோது கையில் வைத்திருந்த இரும்பு ராடால் என் தம்பியை தாக்கினார் பின்னிட்டு என்னையும் அடித்தார். நான் மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டேன். என் பேக்கை பிடிங்கி கொண்டுசென்றுவிட்டார்.

2. எனது பேக்கை காண்பித்தால் அடையாளம் சொல்வேன். அதில் ஏடிஎம் கார்டுகள் credit கார்டுகள், IOB, HDFC செக்புக்கள் வைத்திருந்தேன். என்னிடம் காண்பிக்கபடும் பேக்குதான் எதிரி பிடிங்கியது. பேக் ச.பொ.2 ஆகும். செக் புத்தகங்கள் ச.பொ.3 ஆகும். நான் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்குயிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளார்கல் நான் அங்கு சிகிச்சை பெற்றேன். போலீசார் என் தம்பியிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாக தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை பின்னிட்டு விசாரித்தார்கள். சம்மபவத்தில் ஈடுபட்ட நபரை கைது செய்ததாக போலீசார் சொன்னார்கள் . நானும் என் தம்பியும் திருப்பூர் சிறைச்சாலைக்கு சென்று அடையாளம் காண்பித்தோம்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்மபவ நடந்தாக கூறும் இடமானது இருட்டான பகுதி என்றால் தெரு விளக்கு உள்ளது. சம்மபவ இடத்தில் 100 அடி தூரம் வரை காலியிடம் என்றால்இல்லை கடைகள் வீடு உள்ளது. எத்தனை வீடுகள் கடைகள் உள்ளது என்றால் 4 – 5 வீடுகள் ஒரு 4 கடைகள் இருக்கும். கோவை அரசு மருத்துவமனையில் மருத்துவர் என்னை சிகிச்சைக்கு சேர்த்த சமயம் அடையாளம் தெரியாத நபர் அடித்தாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நபரை சம்பவத்திற்கு முன்பாக அவரை நான் பார்த்தில்லை என்பதால் அவ்வாறு சொன்னேன். போலீஸ் விசாரனையில் அந்த நபரின் அங்க அடையாளங்கள் நிறம் உயரம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. கோவை அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் வீட்டிற்கு வந்த சமயம் எதிரியை போலீசார் பிடித்துவிட்டனர் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து அவ்வாறு பிடித்தாக தெரிந்துகொண்டேன் என்றால் சம்மபவத்திற்கு பின்னிட்டு 2 நாட்கள் என்று சொன்னார்கள். என் தம்பி காவல் நிலையம் சென்று அந்த நபரை பார்த்து வந்தார்

என்றால் ஆமாம். எத்தனை நாட்கள் கழித்து சிறைச்சாலையில் அவரை அடையாளம் காண்பித்தேன் என்றால் 20 நாட்கள் இருக்கும். சிறைச்சாலைக்கு நானும் என் தம்பியும் ஒன்றாக சென்றோம். அந்த நபர் எவ்வாறு இருப்பார் என்று என் தம்பி சொன்னார் என்றால் ஆமாம் ஆனால் சம்பவ நாளில் அவரை பார்த்துள்ளேன். நான் சிகிச்சையில் இருக்கும்போது அடுத்த நாள் வந்து போலீசார் என்னை விசாரித்தார்கள் பின்னிட்டு விசாரிக்கவில்லை.

3. அடையாளம் காண்பிப்பதற்கு முன்பாக எதிரியின் புகைப்படத்தை பார்த்துவிட்டு சென்றோம் என்றால் இல்லை. ஏடிஎம் கார்டை எப்போது பயன் படுத்தினேன் என்றால் சம்பவத்திற்கு பின்னிட்டு அதை block செய்துவிட்டேன். மேற்படி block செய்வதற்கு முன்பாக atmcard பயன்படுத்தப்பட்டதா என்று தெரிந்துகொண்டேனா என்றால் பயன் படுத்தவில்லை. எனது வங்கி கணக்கில் பணம் இருந்தது. இன்றைய தேதி வரை அந்த ஏடிஎம் கார்டை பார்க்கவில்லை என்றால் ஆமாம். ச.பொ.2 , 3 பொருட்களை பின்னிட்டு நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் என்னிடம் இருந்து பொருட்கள் எதையும் பிடிங்கி செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் இருட்டான பகுதி என்பதால் என்னை யார் தாக்கினார் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. போலீஸ் என்னை விசாரித்த சமயம் அந்த நபர் வந்த வாகனத்தின் பதிவு எண், பெயர் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்தை நான் பின்னிட்டும் போலீசாரிடம் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னை யார் எந்த வண்டியில் வந்து தாக்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும் ஏற்கனவே எதிரியின் புகைப்படத்தை எங்களிடம் காண்பித்த நிலையிலும் எனது தம்பி ஏற்கனவே காவல் நிலையத்தில் பார்த்து அவரை பற்றி விவரங்களை சொன்னதன் பேரில் நான் சிறைச்சாலைக்கு சென்று அவரை அடையாளம் காண்பித்தேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் எதிரியை சந்தேகத்தின் பேரில் கைது செய்து ஒரு தவறான வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றும் அவர்கள் சொல்லிகொடுத்தன் பேரில் எதிரியை ஏற்கனவே சம்பவ இடத்தில் பார்த்தாக சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தாக்கிய நபர்எந்த வகையான அடையை அணிந்திருந்தார்

என்று போலீஸில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எதிரிக்கு இந்தவழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.07.18 17:01:42 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.